
சரியானதும் மிகவும் பொருத்தமான விடையினைத் தெரிவு செய்து அதன் கீழ் கோடிடுக.

தாவர,விலங்கு உணவுகளும் அவற்றில் அடங்கியுள்ள புரதம்,கொழுப்பு ஆகிய போசணைக்கூறுகளும் அவற்றுக்கிடையேயான தொடர்புகளும் உருவில் காட்டப்பட்டுள்ளது. அவற்றை அவதானித்து 1ம், 2ம் வினாக்களுக்கு விடையளிக்க.




01. B விலங்கு உணவைக்குறிக்கின்றது எனின், பருப்பைக் குறிக்கும் எழுத்து எது?




1. A 2. C 3. D

02. C யினால் குறிக்கப்படும் உணவுவகையாக அமையக் கூடியது?

1. முட்டை 2. நெய் 3. கருவாடு

03. கீழே சதுரக்கடதாசியொன்று படத்தில் காட்டியவாறு மடிக்கப்பட்டு நிழற்றிய பகுதி வெட்டி நீக்கப்பட்டது. அதை மீண்டும் விரிக்கும் போது தோன்றும் விதத்தை தெரிந்து கோடிடுக.



1. 
2. 
3. 

A,B,C என்பவர்கள் முறையே ஒருவேலையை ஆரம்பித்து ஒருவர் தொடங்கி முடிக்கும் நேரத்தில் மற்றவர் ஆரம்பித்து மூவருமாக 3மணித்தியாலங்கள் 35நிமிடத்தில் நிறைவு செய்தனர். A வேலையைத் தொடங்கி 45நிமிடத்தில் நிறைவு செய்தார். B , 13:15மணித்தியாலத்தில் வேலையை தொடங்கி 1மணித்தியாலம் 40 நிமிடம் வேலை செய்தார்.

04. C வேலையை நிறைவு செய்த நேரம்

1. 16:05 2. 14:05 3. 14:55


05. அதிக நேரம் வேலை செய்தவர் யார்?

1. A 2. B 3. C

06. இந்து அராபிய எண்ணிலுள்ள இலக்கங்களைக் (ஒரு இலக்கத்தை ஒருதடவை மாத்திரம் பயன்படுத்த முடியும்) கொண்டு ஆக்கக்கூடிய மிகப்பெரிய நான்கிலக்க எண்ணிற்கும் மிகச்சிறிய நான்கிலக்க எண்ணிற்கு இடையேயான வித்தியாசம் யாது?

1. 8853 2. 3087 3. 8642

07. கீழே ஒரு உருளையின் அரை விளிம்பின் நீளமும் உருளையின் உயரமும் தரப்பட்டுள்ளது. அதை புள்ளிக் கோட்டின் வழியே வெட்டிப்பிரிப்பதன் மூலம் பெறப்படும் செவ்வகத்தில் வெட்டக்கூடிய 4cm விட்டமுடைய வட்டங்கள் எத்தனை?



1. 6 வட்டங்கள் 2. 12 வட்டங்கள் 3. 5 வட்டங்கள்

08. 6 வருடங்களின் முன் தாயின் வயது மகளின் வயதைவிட 4 மடங்கும் 4வயதும் அதிகமாகும். தற்போது இருவரினதும் வயதுகளின் கூட்டுத்தொகை 66 எனின், 6வருடங்களின் முன் மகளின் வயது யாது?

1. 12 வயது 2. 10 வயது 3. 15 வயது

09. நிதா ஒரு குறித்த நேரத்தில் ஒரு புத்தகத்தில் 63ம் பக்கத்திலிருந்து 92ம் பக்கம் வரை வாசித்தான். அவன் குறித்த நேரத்தில் வாசித்த பக்கங்கள் எத்தனை?

1. 29 பக்கங்கள் 2. 30 பக்கங்கள் 3. 28 பக்கங்கள்


10. நாதனுக்கு 3 ஆண் சகோதரர்கள். அவனின் அக்காவிற்கு இரண்டு அண்ணாமாரும் குடும்பத்தில் ஒரு பெண்பிள்ளையாயின், அவனின் குடும்பத்திலுள்ள பிள்ளைகள் எத்தனை பேர்?

1. 4பேர் 2. 5பேர் 3. 6 பேர்

11. ஒரு வாகனத்தரிப்பிடத்தில் உந்துருளிகளினதும் முச்சக்கரவண்டிகளினதும் அவற்றின் சக்கரங்களினதும் மொத்த எண்ணிக்கை 105 ஆயின், வாகனங்களின் எண்ணிக்கை யாது?

1. 15 2. 45 3. 30

12. கீழ்வரும் உருவில் காணப்படும் முக்கோணிகள் எத்தனை?




1. 9முக்கோணிகள் 2. 8 முக்கோணிகள் 3. 7 முக்கோணிகள்

13. ஒரு நோயாளிக்கு ஒவ்வொரு 6மணித்தியாலத்திற்கு ஒரு தடவை வீதம் 4தடவை மாத்திரைகள் பாவிக்க வேண்டும். ஒரு தடவையில் பாவிக்கவேண்டிய மாத்திரைகள் 1 ஆகும். இரண்டு நாளைக்குப் பாவிக்கத் தேவையான மாத்திரைகள் எத்தனை?

1. 07 மாத்திரைகள் 2. 08 மாத்திரைகள் 3. 09 மாத்திரைகள்

14. கீழ்வரும் கதைப்படங்களை ஒழுங்குபடுத்தினால் காணப்படும் சரியான ஒழுங்கு யாது?



A



B



C



D



E

1. E,B,A,C,D 2. C,B,A,D.E 3. C,A,B,D,E

15. கமலன் அரச வங்கியொன்றில் கடமை புரிகின்றார். அரச வங்கிகளுக்கு வார இறுதிநாட்களிலும் அரச பொதுவிடுமுறை நாட்களிலும் மாதமொரு கடமை நாள் விசேட லீவுமாகும். சித்திரை 1ந்திகதி ஞாயிறுவாக உடைய மாதத்தில் 4பொதுவிடுமுறை நாட்களாகும். பொதுவிடுமுறை நாட்கள் கடமை நாட்களிலிலேயே வருகின்றன. கமலன் அம்மாதத்தில் வேலை செய்த நாட்கள் எத்தனை?

1. 16நாட்கள் 2. 14நாட்கள் 3. 20 நாட்கள்

16. கீழே தரப்பட்டுள்ள வாக்கியங்களில் சரியாக எழுதப்பட்ட வாக்கியத்தை தெரிவுசெய்க.

1. பயிர்ச்சியாளர்கள் விடுதியில் தங்கியிருக்க வசதி செய்யப்பட்டுள்ளது.
2. பயிற்ச்சியாளர்கள் விடுதியில் தங்கியிருக்க வசதி செய்யப்பட்டுள்ளது.
3. பயிற்சியாளர்கள் விடுதியில் தங்கியிருக்க வசதி செய்யப்பட்டுள்ளது.

17. ஒரு மென்பானப் போத்திலிலுள்ள மென்பானத்தை 6பேருக்கு சமனாகப் பகிர்ந்தபோது ஒருவர் பெற்ற மென்பானம் 250ml ஆகும். அவ்வாறாயின், 24 பேருக்குப் பகிரத் தேவையான மென்பானத்தின் அளவு?

1. 4லீற்றர்250மில்லிலீற்றர் 2. 6 லீற்றர் 3. 6லீற்றர் 250 மில்லிலீற்றர்

18. ஒரு கனவுருவில் அதிகபட்சம் சமனாக இருக்கக் கூடிய முகங்களின் எண்ணிக்கை

1. 2 முகங்கள் 2. 6 முகங்கள் 3. 4 முகங்கள்

19. ஒரு உண்டியலில் ரூபாய்5,ரூபாய்2 நாணயக் குற்றிகள் மட்டும் உள்ளன. அவற்றின் பெறுமதி ரூபாய் 43 ஆயின் உண்டியலில் இருக்கத்தக்க ரூபாய் 5 நாணயக் குற்றிகளின் அதிகபட்ச எண்ணிக்கை?

1. 8 நாணயக் குற்றிகள் 2. 7 நாணயக் குற்றிகள் 3. 5 நாணயக் குற்றிகள்

20. ஒரு எண்ணை நான்கினால் பெருக்கி 7ஐ கூட்டினால் அவ்வெண்ணாக அமையக் கூடியது

1. 49 2. 56 3. 43